
## துர்கா ஸ்டாலின் - அவரும் நானும் (பாகம் 2): நூல்

# பதிப்புரை: நல்லியல்புகளின் ஒளிமிகு சொற்கள்!




‘அவரும் நானும்’ முதல் பாகம் வெளிவந்தபோது சமகாலத்தின் மாபெரும் தலைவரைப் பற்றிய அரியதொரு ஆவணமாக அந்த நூல் வாசகர்களால் கொண்டாடப்பட்டது. அது அரசியல் குடும்பங்கள் பற்றி பொதுவாக உள்ள கற்பனைகள், மிகை எண்ணங்களை முறியடித்த நூல். ஒரு மத்தியதர தமிழ்க்குடும்பத்தின் எல்லா பிணைப்புகளையும் போராட்டங்களையும் நம்பிக்கைகளையுமே கலைஞரின் குடும்பமும் கொண்டிருந்தது என்பதை ஒரு அற்புதமான சித்திரமாக அந்த நூல் நமக்குக் காட்டியது. ஆலமரம் போன்ற கலைஞரின் குடும்பம் தமிழ்நாட்டின் சாமான்ய மனிதர்களின் குடும்பங்களைப்போன்ற இயல்பும் எளிமையும் கொண்ட குடும்பமே என்பதை நூலாசிரியர் நமக்கு துல்லியமாக எடுத்துரைத்தார்.

இப்போது இதன் இரண்டாம் பாகத்தையும் தமிழ்கூறும் நல்லுலகிற்கு திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் எழுதி அளித்திருக்கிறார். இந்த நூலின் தனிச் சிறப்பைப் பற்றி நாம் பேசுவதற்கு முன் இதுபோன்ற நூல்கள் உலக அளவிலேயே மிக அபூர்வமாகவே எழுதப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி சில வார்த்தைகள் இங்கே குறிப்பிட வேண்டும்.

**பொதுவாக பெரும் தலைவர்களைப் பற்றிய நூல்கள் சுயசரிதைகளாக அவர்களாலேயே எழுதப்படுவதுண்டு. அல்லது ஜவஹர்லால் நேரு பற்றிய நினைவுகளை எழுதிய எம்.ஓ. மத்தாய் போன்ற அவர்களது உதவியாளர்களோ நண்பர்களோ எழுதும் நூல்கள். அல்லது ஆய்வாளர்களால் எழுதப்படும் தலைவர்களின் வரலாறுகள். உதாரணமாக முத்தமிழ் அறிஞர் கலைஞரைப்பற்றி ஏ.எஸ்.பன்னீர் செல்வம் எழுதிய நூல் அவரைப்பற்றி சமநோக்கில் எழுதப்பட்ட மிகச்சிறந்த வாழ்க்கை வரலாறு.**

**இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது துர்கா ஸ்டாலின் அவர்களால் எழுதப்பட்ட ‘அவரும் நானும்’ நூல். கடுமையான சவால்களையும் பெரும் ஏற்றஇறக்கங்களையும், இடையறாத சோதனைகளையும் சந்தித்த ஒரு அரசியல் குடும்பத்திற்குள் திருவெண்காடு என்ற ஒரு கிராமத்திலிருந்து மருமகளாக நுழைந்த அவரது ஆழமான நினைவுகள் வேறு எவராலும் அறியப்படாத, சொல்லப்படாத பல பதிவுகள் முதல்நிலைத் தகவலாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தலைவர்களின் இணையராக இருந்தவர்களால் இதுபோன்ற நூல்கள் உலக அளவிலேயே வெகு அரிதாகவே எழுதப்பட்டிருக்கின்றன.**

நான்காவது அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் மேடிசன் குறித்த நினைவுக் குறிப்புகளை அவரது மனைவி டோலி மேடிசன் ‘The Memoirs and Letters of Dolley Madison’ என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார்.

பதினெட்டாவது அமெரிக்க ஜனாதிபதி யூலிஸ்ஸஸ் எஸ். கிராண்ட் பற்றிய நினைவுகளை ஜூலியா டென்ட் கிராண்ட் ‘ The Personal Memoirs of Julia Dent Grant’ எழுதினார். இந்த நூல் கிராண்ட்டின் தனித் தன்மை மற்றும் தலைமைத்துவத்தைப் பற்றிய தனிப்பட்ட பார்வையை வழங்குகிறது.

இருபத்தெட்டாவது அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன், வூட்ரோ வில்சனின் மனைவி எடித் போலிங் வில்சனால் எழுதப்பட்ட ’My Memoir’ என்ற தலைப்பிலான நினைவுக் குறிப்புகள் வில்சனுடனான அவரது வாழ்க்கை அவரது ஜனாதிபதி பதவி மற்றும் முதல் உலகப் போரின் போது அவரது தலைமைத்துவத்தைப் பற்றிப் பேசுகிறது.

முப்பத்தி இரண்டாவது அமெரிக்க ஜனாதிபதி ஃபிராங்கிளின் டி. ரூஸ்வெல்ட் குறித்து எலினோர் ரூஸ்வெல்ட்டால் எழுதப்பட்ட நினைவுக்குறிப்புகள் ’ This I Remember’, முப்பத்தி ஆறாவது அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி. ஜான்சன் பற்றி லேடி பார்ட் ஜான்சன் எழுதிய A white house diary’ முப்பத்தி எட்டாவது அமெரிக்க ஜனாதிபதி ஜெரால்ட் ஆர். ஃபோர்ட் குறித்து பெட்டி ஃபோர்ட் எழுதிய ‘ The Times of My Life’., முப்பத்தி ஒன்பதாம் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் குறித்து ரோசலின் கார்ட்டர் எழுதிய ’ First Lady from Plains’, நாற்பதாவது அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் குறித்து நான்சி ரீகன் எழுதிய ’My Turn: The Memoirs of Nancy Reagan’ நாற்பதோராவது அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் எச்.டபிள்யூ. புஷ் குறித்து பார்பரா புஷ் எழுதிய ‘ Barbara Bush: A Memoir’, நாற்பத்தி நான்காவது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, குறித்து மிஷேல் ஒபாமா எழுதிய ’ Becoming’, நாற்பத்தி ஐந்தாவது மற்றும் நாற்பத்தி ஏழாவது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குறித்து மெலனியா டிரம்ப் எழுதிய ’ Melania’ என தலைவர்களின் இணையர்களால் எழுதப்பட்ட நினைவுக்குறிப்பு நூல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

அமெரிக்காவிற்கு வெளியில் வெகு அபூர்வமாகவே இத்தகைய நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்தவகை நூல்களின் தனிச்சிறப்பு என்னவென்றால் தலைவர்கள் பற்றி பொதுவாக அறியப்பட்ட ஆளுமைச் சித்திரங்கள் மற்றும் தகவல்களைத் தாண்டி அவர்கள் குறித்த மிக நுட்பமான தனிப்பட்ட நிகழ்வுகளையும் பண்புகளையும் வெளிப்படுத்துவதுடன் மிக முக்கியமான அரசியல் நெருக்கடிக் காலங்களில் அந்தந்தத் தலைவர்களின் மனநிலை, அணுகுமுறைகள் குறித்த நம்பகமான புதிய தகவல்களை அளிக்கின்றன. அவை வரலாற்றை எழுதும்போது ஆய்வாளர்களுக்கு மிக முக்கியமான சாட்சியங்களாகவும் இருக்கின்றன.

**அந்தவகையில் உலக அளவிலேயே தலைவர்கள் குறித்து அவர்களின் இணையர்களால் அரிதாக எழுதப்படும் அரிதான நூல்களின் வரிசையில் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களின் நூல் இடம்பெறுகிறது. இந்திய அளவிலோ தமிழிலோ இத்தகைய ஒரு நூல் வேறு எந்த தலைவரின் இணையராலும் எழுதப்பட்டிருந்தால் அது மிகவும் அபூர்வமே.**

உலகளாவிய அளவில் இணையரால் எழுதப்பட்ட நூல்கள் அத்தலைவர்களின் மிக நெருக்கடியான காலங்களில் அத்தலைவர்களின் செயல்பாடுகளை விவரிப்பதுபோலவே இந்த நூலும் விவரிக்கிறது.

‘நமக்கு நாமே’ பயணம், கலைஞரின் மறைவு, கொரோனா காலம் இவை மூன்றும் குறித்து இந்த நூல் மிக ஆழமான மனப்பதிவுகளையும் நெகிழ்ச்சியூட்டும் தருணங்களையும் பதிவு செய்கிறது. அவை ஒரு பெரும் நாவலில் வரும் காவியத் தன்மைகொண்ட சித்திரங்கள் போலுள்ளன.

அதேபோல அவரது சகோதரியின் மறைவு குறித்த அத்தியாயம் அத்தகைய இழப்புகளைச் சந்தித்த எவரையும் மனமுடையச் செய்வது. நம் சகோதரர்களோ சகோதரிகளோ நாம் பார்க்க இறப்பது நம் உடலின் ஒரு பகுதி காணமல் போவதற்குச் சமமானது. எந்த சமாதானத்தாலும் ஆறாத் துயரம் அது. அந்தத் துயரத்தை நெஞ்சின் ஆழத்தைத் தொடும் வகையில் சித்தரிக்கிறார்.

கலைஞர் மிகவும் உடல் நலம் குன்றியிருந்தபோது கலைஞர்- தயாளு அம்மாள் இருவருமே ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள முடியாத நினைவு மயங்கிய நிலையில் இருவர் கைகளையும் பிணைத்துவைத்தது குறித்து நூலாசிரியர் எழுதுகிறார். என் மனம் அதைக் கடந்து செல்ல முடியாமல் கலங்கிவிட்டது. ஒரு மகத்தான கவிதையில் எழுதப்பட வேண்டிய காட்சி அது.



கவிஞர்
மனுஷ்ய புத்திரன்

இப்படி எத்தனை எத்தனையோ காட்சிகளை அவ்வளவு துல்லியமாக இந்த நூல் முழுக்க எழுதிச் செல்கிறார். கணவரைப்பற்றிய, கலைஞரைப் பற்றிய, குடும்பத்தினர் ஒவ்வொரு உறுப்பினர் பற்றிய, பேராசிரியர் மற்றும் தலைவர்கள் பற்றிய, உறவினர்கள் பற்றிய, ஒவ்வொரு காலகட்டத்திலும் மிக முக்கியமான சம்பவங்கள் பற்றிய ஆழமான நினைவுகளால் அவர் மனம் நிறைந்திருக்கிறது. அவருக்கு நல்லவை, கெட்டவை எதுவுமே மறப்பதில்லை.

**தான் திருமணமாகி வந்ததிலிருந்து எப்போதும் போராட்டக் களத்திலும் சவால்களின் நெருப்பிலும் நின்றுகொண்டிருக்கும் ஒரு தலைவரின் வாழ்வின் மிக முக்கியமான வரலாற்றுத் தருணங்கள் அனைத்தையும் அற்புதமாகப் பதிவு செய்ததில் இந்த நூலில் துர்கா ஸ்டாலின் அவர்கள் பெரு வெற்றி பெற்றிருக்கிறார். இது திராவிட இயக்க வரலாற்றை எழுதுபவர்களுக்கும் தங்கள் தலைவரின் வாழ்வோடு தங்களை உணர்வுபூர்வமாக பிணைத்துக்கொண்டிருக்கும் என்னைப்போன்ற தொண்டர்களுக்கும் அவர் அளித்திருக்கும் பெரும் பரிசு.**

தன் கணவரை, கோடிக்கணக்கான மக்களின் தலைவரை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதே அவர் வாழ்நாள் முழுக்க அவரது கடமையாகவும் பொறுப்பாகவும் இருந்திருக்கிறது என்பதை இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் பறைசாற்றுகிறது. அவரது கணவர் எந்த நிழலிலும் அமர்ந்து சொகுசு அரசியல் செய்தவர் அல்ல. அவர் கால்படாத தமிழ் நிலம் இல்லை. அவர் போராடாத களங்களும் இல்லை. இப்படி ஒருவரைப் பாதுகாப்பது அவ்வளவு எளிதும் அல்ல. தலைவர் தமிழர் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கும்போது அவரது உடல்நலனைப் பாதுகாக்க தான் எப்படிப் போராட வேண்டியிருந்தது என்பதைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

ஒரு சிறந்த குடும்பம் அதன் ஜனநாயகப் பண்பினால்தான் மாட்சி பெறுகிறது. அவரவர் நம்பிக்கை அவரவர்க்கு என்ற அடிப்படையில் எப்படி தலைவர் கட்சியையும் குடும்பத்தையும் ஜனநாயப்படுத்தியிருக்கிறார் என்பதற்கான சாட்சியமாக பல நினைவுகளை நூலாசிரியர் பகிர்கிறார். உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்குத் திருமணமாகும்போது அவரது மகள் செந்தாமரை அம்மாவிடம் அண்ணியின் சுதந்திரத்தை எப்படி நாம் மதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தும்போது அதற்குத் தான் சொன்ன பதிலைப் பதிவு செய்கிறார். அந்தப் பதிலில், எப்படி ஒரு மரபான தமிழ்க் குடும்பத் தலைவியாகவும் அதே சமயம் பிறரது உணர்வுகளை, உரிமைகளை மதிக்கும் நவீன ஜனநாயகப் பண்பு உள்ளவராகவும் அவர் திகழ்கிறார் என்பதைப் பார்க்க முடிகிறது.

உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அரசியல்ரீதியான எழுச்சியும் அவர் மக்களிடம் பெறும் செல்வாக்கு தனக்கு ஏற்படுத்திய உவகை குறித்தும் அவர் எழுதும்போது அந்தச் சொற்கள்

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.**

என்ற குறளுக்கு துர்கா ஸ்டாலின் அவர்கள் தன் உணர்வால் எழுதிய உரைபோல் ஒலிக்கின்றன.

இந்த நூல் முழுக்க திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களின் ஆளுமை பலவிதங்களிலும் மிகுந்த ஒளியுடன் வெளிப்படுகிறது. உயர்வான ஆன்மீக உணர்வு தரும் எளிமையும் நெகிழ்ச்சியும் தன் முனைப்பற்ற தன்மையும் அவரது ஒவ்வொரு சொல்லிலும் வெளிப்படுகிறது. கோயிலுக்கு தரிசனத்திற்குச் செல்லும்போது தனக்கு அளிக்கப்படும் சிறப்பு முன்னுரிமை குறித்து அவர் மிகுந்த கூச்சத்துடன் விவரிக்கிறார். மற்றவர்களில் ஒருவராகவே அவர் எப்போதும் தன்னை வைத்துக்கொள்ள விரும்புகிறார். முதலமைச்சர் அவர்களின் மனைவி என்ற அதிகாரத்தையோ சலுகையையோ அவர் எந்த இடத்திலும் கோருவதில்லை. எப்படி தலைவர் தன் தந்தையின் செல்வாக்கை எந்த இடத்திலும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதில்லையோ அதேபோல நூலாசிரியரும் தன் கணவரிடமிருந்து அந்த இயல்பை வரித்துக்கொள்கிறார்.

**ஒரு தமிழ்க் குடும்பத்தின் எல்லாப் பொறுப்புகளையும் சுமக்கும் ஒரு குடும்பத்தலைவியின் முழுமையான சித்திரத்தை அவர் வெளிப்படுத்துகிறார். ஒரு தி.மு.க. தொண்டரின் குடும்பத்தில் என்னென்ன பொறுப்புகளும் பிரச்சினைகளும் இருக்குமோ அவை எல்லாமே தலைவரின் குடும்பத்தை தலைமை தாங்கும் இவருக்கும் இருப்பதை இந்த நூலில் காணும்போது ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இதை தங்கள் குடும்பத்தின் கதையாகவும் துர்கா ஸ்டாலின் அவர்களை தங்கள் குடும்பத்தில் ஒருவராகவுமே உணர்கின்றனர். இதுவே இந்த நூலின் பெரும் வெற்றியும் தனித்துவமுமாகும்.**

இந்த நூலின் பிற்பகுதியில் நான் காண்டுகால தி.மு.க. ஆட்சியின் திட்டங்கள், சாதனைகள் பற்றிப் பேசுகிறார். திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதும் சுயசரிதை என்பது ஒருபோதும் தன் வரலாறாக மட்டும் இருக்காது. அது தமிழ்நாட்டின் வரலாறாகவும் தமிழ் நாட்டு மக்களின் நல்வாழ்க்கைக் குறித்த வரலாறாகவுமே இருக்கும். அதனால்தான் தன் கணவரைப் பற்றிப் பேசுவது என்பது அவரது மக்கள் தொண்டையும் ஆட்சியின் மாண்பையும் பற்றிப் பேசுவதாகும் என்பதை உணர்ந்து அத்திட்டங்களை விவரிக்கிறார்.

இந்த நூல் நம் காலத்தின் மகத்தான தலைவரின் கதை. அந்தத் தலைவரை அல்லும் பகலும் பாதுக்காத்து நிற்கும் ஒரு தமிழ்க் குடும்பத் தலைவியின் கதை. இது ஒவ்வொரு திராவிடக் குடும்பங்களின் கதை. ஒரு திராவிட இயக்கக் குடும்பம் எப்போதும் அரசியலின் கனலின் தகித்துக்கொண்டிருக்கும். அந்த தகிப்பினூடே அன்பின், ஆதரவின் உயர்ந்த மெல்லியல்புகளை இந்த நூலில் துர்கா ஸ்டாலின் அவர்கள் வெளிப்படுத்துகிறார்.

**இந்நூல் முக்கால் நூற்றாண்டாக தமிழக அரசியலிலும் இந்திய அரசியலிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி நிர்ணய சக்தியாக திகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சமூக நீதிக்கான அரசியல் குடும்பத்தின் கதை.**

**இந்தியாவிலேயே முதன் முதலாக அத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவராலேயே எழுதப்பட்டிருப்பது இதுவே முதல் முறை. இந்த நூலின் இரண்டு தொகுதிகளுமே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் படிக்கப்பட வேண்டிய தகுதி கொண்டவை. அப்போது இது**

**மிகச்சிறந்த சரிதை நூலுக்கான உயரிய இலக்கிய அங்கீகாரத்தைப் பெறும். வேறு எவரும் இதற்கு முன் கண்டிராத மிக அரிய புகைப்படங்களுடன் இந்த நூல் ஒரு வரலாற்று ஆவணமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.**

ஒரு நூல் மிகுந்த வாசிப்புத் தன்மைக்கொண்டதாக, ஒரு சிறந்த நாவலுக்கான மிக வேகமான மொழிநடையில் செம்மையாக எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு முதன்மையான காரணம் இந்த நூலை தொகுத்தளித்திருக்கும் லோக நாயகி அவர்கள். மிகச்சிறந்த இதழியலாளரான அவர் இந்த நூலை வெகு செம்மையாக உருவாக்கியிருக்கிறார்.

‘அவரும் நானும்’ நூலின் முதல் தொகுதியைப் போலவே இந்த இரண்டாம் தொகுதியையும் வெளியிட எங்களுக்கு வாய்ப்பளித்த திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களுக்கு ‘**உயிர்மை பதிப்பகம்**’ சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**வெளியீடு: உயிர்மை பதிப்பகம், மனை எண் 2., மாதா கோயில் முதல் குறுக்குத் தெரு, சி.எல்.ஆர்.ஐ நகர், நீலாங்கரை, சென்னை– 600 041, தொலைபேசி: 044–4858727, 90032 18208.**

**பக்கம்: 950 (முழுவண்ணத்தில் கெட்டி அட்டைப் பதிப்பு)**

**விலை: ரூ. 1900**